# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2032 - 2017 අගෝස්තු මස 11 වැනි සිකුරාදා - 2017.08.11

*2032 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 780 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1210 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


***கவனிக்க.***- (i) அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் சட்டமூலம் 2017, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மாகாண சபை தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் 2017, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2017, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஓகத்து மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1209- B81197 - 5,403 (2017/08)

# மாகாண சபைகள் அறிவித்தல்

## 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழான கட்டளை

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண சபையின் மாகாண தெருப் போக்குவரத்து, கூட்டுறவு, வர்த்தக, வீடு, கட்டமைப்பு கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் ஆர்.பி.டீ. குணதாச தெஹிகம ஆகிய நான், வடமேல் மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளதும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் 11 இலக்க கூட்டுறவுச் சங்க (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கத்துக்கான கூட்டுறவு சங்கச் சட்டமும் அதன் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரிடத்தில் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரிடத்தில் விதிக்கப்பட்டுள்ள உரிய அட்டவணையில் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா அதிகாரங்களையும் உரிய அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி தொடக்கம் இத்துடன் கையளிக்கின்றேன்.

ஆர்.பி.டீ. குணதாச தெஹிகம,
வடமேல் மாகாண சபையின் மாகாண
தெருப் போக்குவரத்து, கூட்டுறவு, வர்த்தக, வீடு,
கட்டமைப்பு, கைத்தொழில் மற்றும் கிராம
அபிவிருத்தி அமைச்சர்.

2017, யூலை 17.

### அட்டவணை

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் | III ஆம் நிரல் |
|---|---|---|
| முன்னவ அச்சிகே மல்காந்தி பியசேன | 2017.06.28 | கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 3, 5, 6, 7, 8, 9, 33, 39, 44, 44(6), 45, 46, 48, 49, 50, 52, 53, 54,58 [58 (3) மற்றும் 58(5) தவிர] 59, 68 மற்றும் 72 ஆகிய பந்தியின் கீழ் ஆணையாளர் மற்றும் பதிவாளரினால் எல்லா அதிகார விதிகளின் 4, 11, 15, 16(II)18, 19, 27, 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 43, 48, 49 [49(XII) தவிர] 51, 52 மற்றும் 53 கான விதிகளின் கீழ் ஆணையாளர் மற்றும் பதிவாளரினால் எல்லா அதிகாரமும். |

8 - 236

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.